People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

6.05.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 01.05.2011 முதல் 6.05.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**01-05-2011 முதல் 6-05-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 1 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 25 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 11 |
| 5. | வகுப்பறை வன்முறை | 1 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 4 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 3 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 1 |
| 9. | கொத்தடிமை | 1 |
| 10. | பெண் சிசு கொலை | 2 |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 11 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 1 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | – |
| 17. | மணல் கொள்ளை | 4 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |

| | | |
|---|---|---|
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | – |
| | மொத்தம் | 65 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-18
## 01.05.2011 முதல் 6.05.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1170. | 1.5.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** உத்திரமேரூர் மணம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சரவணன். பெருநகர் காவல் நிலைய காவலர்கள் சரவணை காவல்நிலைய கழிவறைக்குள் வைத்து அடித்துச் சித்திரவதை. | காவல் நிலையச் சித்திரவதை | சன் நியூஸ் |
| 1171. | 01.5.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** தியாகதுருகம் அரசு வட்டார சுகாதார மையத்தில், பிரசவத்தில் அறுவை சிகிச்சை முடிந்த மயக்கத்தில் இருந்த இரண்டு பெண்களிடம் துப்புரவு ஊழியர் குப்புசாமி சில்மிஷம் செய்ததாக புகார். குப்புசாமி பணிநீக்கம். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 1172. | 01.5.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** காஞ்சிபுரம் செட்டியார்பேட்டை காமராஜர் நகரைச் சேர்ந்த பாலாஜி(32) மகன் பரணி(3). ஷகிலாபானு(32) குழந்தையை கடத்திச் சென்று திருப்பூர் பேருந்து நிலையம் அருகே பிச்சை எடுக்க வைத்துச் சித்திரவதை சிறுவன் மீட்பு. ஷகிலாபானு கைது. | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 1173. | 01.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள இருங்காட்டுக் கோட்டை ஏரியில் மண் திருட்டு நடைபெறுவதாக புகார். சப் இன்ஸ்பெக்டர் உத்தமன் மற்றும் காவலர்கள் சென்றபோது மணல் திருடியவர்கள் தப்பியோட்டம். இன்ஸ்பெக்டர் மற்றொரு சப்– இன்ஸ்பெக்டருடன் இணைந்து லஞ்சம் வாங்கிக் கொண்டு வழக்கு பதிவு செய்யாமல் லாரியை விடுவித்ததாக புகார். | லஞ்சம் & மணல் கொள்ளை & காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 1174. | 01.5.2011 | **மதுரை மாவட்டம்:** ராமேஸ்வரம் அக்காமடத்தைச் சேர்ந்த இருளய்யா மகள் விமலாதேவி(20). கருமாத்தூர் அருள்ஆனந்தர் கல்லூரியில் விடுதியில் தங்கி, பி.ஏ.(பொருளாதாரம்) மூன்றாம் ஆண்டு படித்து வந்தார். கல்லூரி வளாகத்தில் மொபைல் போன் பயன்படுத்தியதால் விடுதி வார்டன் கிரண் போனை பறிமுதல் செய்ததோடு, பெற்றோரை அழைத்துவருமாறு மிரட்டல். பெற்றோர் திட்டுவார்கள் என பயந்த விமலாதேவி விடுதியில் தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1175. | 01.5.2011 | **ராமநாதபுரம் மாவட்டம்:** அபிராமத்தை சேர்ந்த வீரபெருமாள்(35) மனைவி சுதா(29). மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு கூலிபடை மூலம் கொலை செய்ய முயன்றதாக வீரபெருமாள் மீது சுதா புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினகரன் |
| 1176. | 01.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சம்மட்புரத்தைச் சேர்ந்த நாகேந்திரன் மனைவி நவநீதம்(32). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த நவநீதத்தை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1177. | 01.5.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் துளசிராம் நகரைச் சேர்ந்த ஜவஹர் மனைவி விஜி(33)யை பக்கத்து வீட்டில் வசிக்கும் செய்யது(35) கேலி செய்ததாகப் புகார். செய்யதுவை கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்று இன்ஸ்பெக்டர் சரவணன் தாக்குதல். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் செய்யது இன்ஸ்பெக்டர் மீது புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1178. | 01.5.2011 | **கோவை மாவட்டம்:** கோவை அருகேயுள்ள நாயக்கன்பாளையத்தைச் சேர்ந்த பெரியண்ணன் மகள் தீபிகா(17) பிளஸ் 2 மாணவி. அதே பகுதியைச் சேர்ந்த சதீஷ்(23). இருவரும் காதலித்தனர். தீபிகாவின் பெற்றோர் திருமணத்திற்கு மறுப்பு. ஆத்திரமடைந்த சதீஷ் தீபிகாவை கழுத்தை நெறித்துக் கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 1179. | 01.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை குமாரத்தைச் சேர்ந்த இளமாறன் மனைவி சரளாதேவி பிரசவத்திற்காக டி. கல்லுப்பட்டி அலுவலகம் அருகேயுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதி. குழந்தை பிறந்தது. டாக்டரின் தவறான அறுவை சிகிச்சையால் மார்பு வலி ஏற்பட்டு தனது மனைவி இறந்தாக இளமாறன் மதுரை உயர் நீதிமன்றத்தில் கிளையில் மனு தாக்கல். | பெண்கள் மீதான வன்முறை & மருத்துவர்கள் அலட்சியம் | தினகரன் |
| 1180. | 01.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் 10 வது வார்டு பகுதியில் உள்ள செந்திக்குமார நாடார் மீனாட்சியம்மாள் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் கட்டுமானப் பணிகள் நடைபெற உள்ள நிலையில் லாரியில் வந்த க செங்கலை பள்ளியின் உள்ளே கொண்டு சேர்க்கும் பணியை மாணவ–மாணவியரை வைத்து தலைமை ஆசிரியர் செய்ததாகப் பொதுமக்கள் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 1181. | 02.5.2011 | **மதுரை மாவட்டம்:** டி. கல்லுப்பட்டி அருகே வில்லூரில் தலித் மக்கள் காலனி அணிந்த நடந்து செல்வதற்கும், சைக்கிளில் செல்வதற்கும் தலித் மக்கள் மீது தடை. | காவல் நிலையச் சித்திரவதை & தலித்துகள் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பேச்சுவார்ததை நடத்த சென்ற எஸ்.பி. அஸ்ரா கார்க் மீது கல்வீச்சு. காவலர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் செந்தில், பழனி மற்றும் சேகர் படுகாயம். | மீதான வன்முறை | |
| 1182. | 02.5.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூரில் ஒதுக்குப்புறமான பகுதியில் கிணற்றில் இளம்பெண் பிணமாக கிடந்ததாக பொதுமக்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1183. | 02.5.2011 | **திருச்சி மாவட்டம்:** திருவெறும்பூர் காட்டூர் பர்மா காலனியைச் சேர்ந்த சதீஸ்குமார்(26) மனைவி தனலட்சுமி(25). இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். திருமணமாகி ஆகி 6 மாங்களே ஆன நிலையில் கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த சதீஸ்குமார் அடித்ததில் தனலெட்சுமி மரணம். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 1184. | 02.5.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் பச்சம்பட்டியைச் சேர்ந்த பிரகாஷ் மனைவி புஷ்பா. சேலம் அரசு மருத்துவமனையில் இடது கை ஊனமுற்ற நிலையில் பிறந்து தங்களது பெண் குழந்தையை வளர்க்க மனமின்றி மருத்துவமனையில் விட்டுச் சென்றதாக புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1185. | 02.5.2011 | **மதுரை மாவட்டம்:** சமயநல்லூர் துவரிமான் இடையே வைகை ஆற்றுப்பகுதியில் ரோந்து சென்ற பொதுப்பணித்துறை அதிகாரி மோகன் மற்றும் பூமிநாதன் உரிய அனுமதியின்றி மணல் கடத்திய டிராக்டரை பறிமுதல் செய்தனர். | மணல் கொள்ளை | தினத்தந்தி |
| 1186. | 02.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** தடங்கம் கிராமத்தைச் சேர்ந்த ராமசாமி மகள் கலா(19). அப்பகுதியில் ராஜஸ்ான் மாநிலம் ஜெய்பூரை சேர்ந்த சுளில்கெய்த் மற்றும் சஞ்சய்வர்மா நடத்திய தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலை செய்த கலாவை குளிர்பானத்தில் மயக்க மருந்துகொடுத்து ஆபாசமான படம் எடுத்து மிரட்டியதாக இருவர் மீது கலா புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 1187. | 02.5.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பாச்சேத்தி வைகையாற்றில் ரோந்துச் சென்ற இன்ஸ்பெக்டர் சேசு அனுமதியின்றி மணல் அள்ளிய 3 லாரிகளை பறிமுதல் செய்தார். | மணல் கொள்ளை | தினகரன் |
| 1188. | 02.5.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஏரிக்கொல்லக்கோடு கிராமத்தைச் சேர்ந்த 14 கிராமத்தினர் மீது காவல்துறை தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | The Hindu |
| 1189. | 03.5.2011 | **திருச்சி மாவட்டம்:** முசிறி தாலுகா, தும்பாலம் கிராமத்தில் வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்த அண்ணாதுரை. அதே | தலித்துகள் மீதான வன்முறை | பிரபாகர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கிராமத்தைச் சேர்ந்த சாதி இந்துக்கள் அண்ணாதுரையைத் தாக்கிச் சித்திரவதை. அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அண்ணாதுரை புகார். | | |
| 1190. | 03.5.2011 | **சேலம் மாவட்டம்:** தலைவாசல் அருகே உள்ள ஆரத்தி அகரத்தைச் சேர்ந்த முத்தையன்(35). அப்பகுதியில் உள்ள ஒரு தனியார் பள்ளியின் தமிழ் ஆசிரியர். அதே பள்ளியில் 10ம் வகுப்பு படித்த மாணவியை கடத்திச் சென்று பாலியல். | குழந்தைகள் பாலியல் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1191. | 03.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே உள்ள வடகரை பெரியகுளம் கண்மாய் பகுதியில் பொதுப்பணிதுறை அனுதியோடு மணல் அள்ளப்படுவதால் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து லாரிகளை மறித்து கிராம மக்கள் போராட்டம். | மணல் கொள்ளை | தினத்தந்தி |
| 1192. | 03.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கோ.புதூர் எஸ்.ஆர்.என்.நகரைச் சேர்ந்த முத்து மகள் சந்தானலெட்சுமி(22). அதே பகுதியில் வசிக்கும் முருகேசன் தனது மகளை கடத்திச் சென்றதாக சந்தானலெட்சுமி பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1193. | 03.5.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் ஜாகீர் ரெட்டிப்பட்டி மாரியம்மன்கோவில் பகுதியைச் சேர்ந்த வாசுகி(23) இவர் சேலம் பேர்லண்ட்சில் உள்ள செராஜெம் உடற்பயிற்சி மையத்தில் பணியளராக பணியாற்றினார். உரிமையாளர் வெங்கடேஷ்(26). திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைக் கூறி பாலியல். வாசுகி புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 1194. | 03.5.2011 | **வேலூர் மாவட்டம்:** திருப்பத்தூர் தாலுகா, ராயல் நகர் பிளஸ்1 மாணவி சோனாஸ்பானு சந்தேககத்திற்கிடமான முறையில் மரணம். | குழந்தைகள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 1195. | 03.5.2011 | **திருச்சி மாவட்டம்:** துறையூர் தாலுகா, பெருமாள்பாளையம் அன்னை சத்தியாநகர் பழனியாண்டி மகன் தங்கராஜை உப்பிலியாபுரம் உதவி காவல் ஆய்வாளர் சாமுவேல் அடித்துச் சித்திரவதை. | காவல் நிலையச் சித்திரவதை | பாஸ்கர் |
| 1196. | 04.5.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** நாட்ரம்பள்ளியில் வசித்துவந்த 7 வயது மாணவி சுஜாதா தருமபுரியில் அரூர் தாலுகா, வாரணதீர்த்தத்தில் உள்ள உறவினர் ராதாமேரி வீட்டிற்கு விடுமுறையைக் கழிக்க வந்துள்ளார். சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த அமல்ராஜ் பாலியல் வன்கொடுமை. அமல்ராஜ் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1197. | 04.5.2011 | **திருப்பூர் மாவட்டம்:** குன்னத்தூரில் உள்ள தனியார் பஞ்சு ஆலையில் கிரஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 9 பெண் குழந்தைகள் கொத்தடிமைகளாக இருந்தது கண்டறியப்பட்டு மீட்கப்பட்டன. | குழந்தைகள் மீதான வன்முறை & கொத்தடிமை | டெக்கான் கிரானிக்கல் |
| 1198. | 04.5.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் தும்பைப்பட்டியைச் சேர்ந்த ரவி மனைவி அமுதா(32). பக்கத்து வீட்டில் வசிக்கும் முத்தையா அவரது மனைவி ஏலம்மாள். இருவருக்கும் நடந்த தகராறில் மனமுடைந்த அமுதா தீக்குளித்துத் தற்கொலை. அமுதாவை மானபங்கம் செய்ததாக முத்தையா மற்றும் ஏலம்மாள் மீது அமுதாவின் தாய் புகார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 1199. | 04.5.2011 | **மதுரை மாவட்டம்:** வெளிச்சநத்தத்தைச் சேர்ந்த லிங்கப்பன் மனைவி பேச்சியம்மாள்(31) மகள் லிங்கம்மாள்(7). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமடைந்த பேச்சியம்மாள் மகளுக்கு தீவைத்து தானும் தானும் தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 1200. | 04.5.2011 | **சென்னை மாவட்டம்:** அடையாறு, காந்தி நகர், கெனால்பேங்க் சாலையைச் சேர்ந்த அசோக்குமார் மனைவி மகேஸ்வரி(37) மகன் கவுதமன்(17). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த அசோக்குமார் மனைவி மற்றும் மகனை எரித்துக் கொன்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 1201. | 04.5.2011 | **வேலூர் மாவட்டம்:** நாட்றம்பள்ளி அடுத்த வெலக்கல்நத்தம் செல்லாகவுண்டனூரைச் சேர்ந்த முருகன் மனைவி கண்மணி(35) மகள் ஸ்ரீ(3). மகன் கிருஷ்ணன்(5). ஐந்து மாத கைக்குழந்தை பிரகாசம். கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த கண்மணி குழந்தைகளை கிணற்றில்போட்டுத் தானும் தற்கொலைக்கு முயற்சி. கண்மணி மற்றும் ஸ்ரீ மருத்துவமனையில் சிகிச்சை. | பெண்கள் மீதான வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 1202. | 04.5.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** அவதானப்பட்டியைச் சேர்ந்த திம்மராயன் மனைவி புனிதா(24) நடத்தையில் சந்தேகப்பட்டு மனைவிக்கு மொட்டை அடித்து துன்புறுத்தியதாக திம்மராயன் மீது புனிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1203. | 04.5.2011 | **நாகை மாவட்டம்:** மணல்மேடு காவல் நிலையத்தில் எந்த ஒரு புகார் மீதும் | காவல்நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காவலர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை. மற்றும் ஆளுங்கட்சி பிரமுகர்களுக்கு ஆதரவாக செயல்படுவதுடன் சமூக விரோதிகளுக்கு துணை போகுல் காவல்துறையினரைக் கண்டித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம். | | |
| 1204. | 04.5.2011 | **தேனி மாவட்டம்:** தேனி அரண்மனை புதூர் கிராமத்தில் நடைபெற்ற திருவிழாவில் மைக்செட்டை இயக்கிய அதே பகுதியைச் சேர்ந்த சக்திவேலை(3). பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட எஸ்.ஐ. உதயகுமார் சக்திவேலை தாக்கியதாக புகார். | காவல்நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1205. | 04.5.2011 | **மதுரை மாவட்டம்:** முடக்குச்சாலையைச் சேர்ந்த கட்டிட கான்ட்ராக்டர் நடராஜன் மனைவி பாக்கியலட்சுமி(45). அதே பகுதியைச் சேர்ந்த மளிகைக் கடைக்காரர் ஜெயபாரதி(23) வீட்டில் தனியாக இருந்த பாக்கியலெட்சுமியை தாக்கி 50 பவுன் நகையைக் கொள்ளைடித்ததாக ஜெயபாரதி கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1206. | 05.5.2011 | **சேலம் மாவட்டம்:** இடைப்பாடி அருகே உள்ள பனங்காட்டுரைச் சேர்ந்த சங்கர் என்கிற ஜெய்சங்கர்(34) பல மாவட்டங்களில் பெண்களை பாலியல் வன்முறை செய்ததாக புகார். ஜெய்டசங்கர் கர்நாடகா மாநிலம் அருகே பிஜப்பூர் அருகே கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 1207. | 05.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** செட்டியார்பட்டி இந்திரா நகரைச் சேர்ந்த ஆதிநாராயணன், மனைவி காசியம்மாள்(65). வீட்டில் தனியாக இருந்த காசியம்மாளை கொலை செய்து 5 சங்கிலி, 20 கிராம் தங்க காசை கொள்ளையடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 1208. | 05.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை எஸ்.எஸ்.காலனியைச் சேர்ந்த வினோத்கண்ணா மனைவி நித்யமீனா(18). கூடுதல் வரதட்சணை கேட்டு கணவர் துன்புறுத்தியதோடு கருவை கலைக்க கட்டாயப்படுத்தியதோடு, கருவை கலைத்ததாக வினோத்கண்ணா மீது நித்யமீனா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 1209. | 05.5.2011 | **மதுரை மாவட்டம்:** பைபாஸ்ரோடு சத்தியமூர்த்தி நகரைச் சேர்ந்த ஸ்ரீதர்(39) மனைவி லாவண்யா(35). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாக லாவண்யா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 1210. | 05.5.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி பொன்மலையில் தென்னக ரயில்வே | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணிமனைக்கு மேற்கு வாசல் வழியாக தளவாடப் பொருட்கள் உள்ளே கொண்டு செல்லவும், வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகள் தொழில் ரீதியாக உள்ளே செல்லவும் அனுமதி வழங்க ரயில்வே பாதுகாப்புபடை காவலர்கள் லஞ்சம் வாங்குவதாக புகார். ரயில்வே ஏட்டு ராமசாமி, எஸ்ஐ குருநாதன் இருவரும் பணிநீக்கம். | | |
| 1211. | 05.5.2011 | **திருப்பூர் மாவட்டம்:** கீரனூர் ஊராட்சி சுள்ளிவலசில் சுற்றுவட்டார ஐம்பது கிராமங்களைச் சேர்ந்த தலித் அருந்ததியர் மக்கள் பயன்படுத்தி வரும் பொதுப்பாதை மற்றும் கிணற்றையும் பயன்படுத்த சாதி இந்துக்கள் தடை. | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1212. | 05.5.2011 | **தருமபுரி மாவட்டம்:** ஒடசல்பட்டி புதூர் கிராமத்தைச் சேர்ந்த மாதவன் மனைவி பழனியம்மாளுக்கு குழந்தை இல்லை. மாதவன் கட்டப்பஞ்சாயத்து மூலம் பழனியம்மாளை பிரிய முயற்சி. கிராமப்பஞ்சாயத்தில் தனக்கு நியாயம் கிடைக்கவில்லை என சமூக நலத்துறை அலுவலரிடம் பழனியம்மாள் புகார். கட்டப்பஞ்சாயத்தார் பழனியம்மாள் மற்றும் அவரது குடும்பத்தினரை ஊரை விட்ட ஒதுக்கியதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை & கட்டப்பஞ்சாயத்து | தீக்கதிர் |
| 1213. | 05.5.2011 | **மதுரை மாவட்டம்:** போடி அருகே கோடாங்கிபட்டியைச் சேர்ந்த ராஜசேகர் மனைவி கவிதா(24). கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக கவிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தீக்கதிர் |
| 1214. | 05.5.2011 | **சென்னை மாவட்டம்:** திருவான்மியூரில் வால்மிகி தெருவில் பிறந்து 4 நாட்களே ஆன ஆண் குழந்தை குப்பைத் தொட்டியில் கிடந்ததாக பொதுமக்கள் புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1215. | 05.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பொன்மேனி பகுதியைச் சேர்ந்த முருகேசன் மகள் காளீஸ்வரி(17), அதே பகுதியைச் சேர்ந்த சையதலி பாத்திமா(15), இருவரையும் காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமணி |
| 1216. | 06.5.2011 | **மதுரை மாவட்டம்:** வசந்த நகரைச் சேர்ந்த கலைவாணி(30). கலைவாணி பூமிநாதன் வீட்டிற்கு கீரை வாங்கச் சென்றார். பூமிநாதன் சில்மிஷம் செய்ததாக கலைவாணி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1217. | 06.5.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** பசுவந்தனை மாரியப்பன் மகள் கலைவாணி(16) அடிக்கடி மொபைல் போனில் யாருடனோ பேசியதால். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றோர் கண்டித்தனர். ஆத்திரமடைந்த கலைவாணி தாய் தந்தையை வீட்டிற்குள் வைத்து பூட்டி விட்டு தலைமறைவு. | | |
| 1218. | 06.5.2011 | **மதுரை மாவட்டம்:** கூடக்கோவில் அருகே தமிழ் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அரசு பேருந்துக்கு தீவைத்ததாக வலையங்குளம் முத்துப்பாண்டி, கீழக்கோவில்குடி சவுந்தரபாண்டி, கள்ளிக்குடி அருகே உள்ள சித்தூர் முனியாண்டி, திருப்பரங்குன்றம் சரவணன், கூடக்கேவில் மூக்கையா இவர்களை காவலர்கள் கைவிலங்கிட்டு திருமங்கலம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். | சிறைச்சாலை வன்முறை | தினமலர் |
| 1219. | 06.5.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** கோவில்பட்டி வீரவாஞ்சிநகர் பேச்சிமுத்து மனைவி மகாலெட்சுமி(19). திருமணமாகி ஒரு மாதம் ஆன நிலையில் மகாலெட்சுமியை திட்டங்குளம் பகுதியில் இண்டிகாவில் காரில் வந்த மர்ம நபர்கள் கடத்திச் சென்ற பாலியல் செய்ததோடு நகைகளையும் பறித்துச் சென்றதாக மகாலெட்சுமி புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 1220. | 06.5.2011 | **மதுரை மாவட்டம்:** ஆழ்வார்புரம் வைகை வடகரையைச் சேர்ந்த முனியாண்டி மனைவி தாயம்மாள்(22) மகள் நர்மதா(1), மகன் தவபாண்டி(4). கணவர் தன்னை சந்தேகப்பட்டு துன்புறுத்துவதால் மனமுடைந்த தாயம்மாள் குழந்தைகளுடன் கமிஷனர் அலுவலகத்தில் தீக்குளித்துத் தற்கொலைக்கு முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை முயற்சி | தினமலர் |
| 1221. | 06.5.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செங்கம் அடுத்த முன்னூர் மங்கலம் கிராமத்தைச் சேர்ந்த கண்ணன்(48) இலவச மின் இணைப்பு கேட்டு மனு. மின் இணைப்பு வழங்க ஆய்வாளர் சிவக்குமார், இளநிலை பொறியாளர் சதாசிவம் ரூ.4,500 லஞ்சம் கேட்டதாக கண்ணன்புகார். | லஞ்சம் | தினமலர் |
| 1222. | 06.5.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் வத்தலக்குண்டு பகுதியைச் சேர்ந்த மாயா என்ற மாயக்கிருஷ்ணன் நிலத்தகராறு விசயமாக காவலர்கள் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். விசாரணையின் போது அடித்துச் சித்திரவதை செய்ததில் மாயா படுகாயம். | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 1223. | 06.5.2011 | **சென்னை மாவட்டம்:** வியாசர்பாடியைச் சேர்ந்த சந்தோஷ்குமார் மனைவி செந்தில்வடிவு (27). தனது நகை மற்றும் பணத்தை பறித்ததோடு சாட்டிங்மூலம் பல பெண்களை ஏமாற்றி வருவதாகவும் கணவர் | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீது செந்தில்வடிவு புகார். | | |
| 1224. | 06.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை புதூர் கற்பகநகரைச் சேர்ந்த வக்கீல் மயில்வாகனராஜேந்திரன். பேனர் வைப்பது தொடர்பாக வக்கீல் ராஜேந்திரன் மற்றும் ஊமச்சிகுளம் டிஎஸ்பி பாண்டியன் இடையே தகராறு. இதில் டிஎஸ்பி கொலைமிரட்டல் விடுத்தாக ராஜேந்திரன் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1225. | 06.5.2011 | **திருச்சி மாவட்டம்:** மணச்சநல்லூர் அருகே உள்ள மேலஸ்ரீதேவிமங்கலத்தைச் சேர்ந்த முருகேசன் மனைவி ராதா. குண்டர்சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள தனது கணவரை காவலர்கள் என்கவுண்டரில் சுட்டுத்தள்ள திட்டமிட்டுள்ளதாகவும் தனது கணவர் உயிரை காப்பாற்றி அவருக்கு பாதுகாப்பு அளிக்குமாறு மதுரை கிளையில் மனு தாக்கல். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1226. | 06.5.2011 | **நாமக்கல் மாவட்டம்:** நாமக்கல் பரமத்தி வேலூர் காளியப்பன், தேன்மொழி பசுபதிபாளையத்தில் உள்ள ராக்கப்பன் சாயப்பட்டறையில் காளியப்பன் குடும்பத்தினரை கொத்தடிமையாக வைத்துச் சித்திரவதை. மீட்டுத்தரக்கோரி மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல். | கொத்தடிமை | தினகரன் |
| 1227. | 06.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** தளவாய்புரம் அருகேயுள்ள கணபதி சுந்தரநாச்சியார்புரத்தைச் சேர்ந்த தட்சிணாமூர்த்தி மனைவி சரோஜா(54). வீட்டில் தனியாக இருந்த சரோஜா கழுத்து அறுபட்டு நிலையில் கொலை செய்யப்பட்டு கிடந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |